**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண். 292/2022**

**CNR No. TNMY06-001787-2022**

கலியமூர்த்தி ..வாதி

...எதிர்...

பொன்னுசாமி ...பிரதிவாதி

இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.244/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் 08.11.2022 ம் தேதியிட்ட A.No.332/2022_ உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அசல் வழக்கு எண்.292/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சிவச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், எ இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்து தொடர்பாக வாதிக்கு பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் 16.02.2021, 19.03.2022, 02.05.2022 தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதால் வாதிக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கும், மன வேதனைக்கும் வாதிக்க பிரதிவாதி கூடுதல் நஷ்ட ஈட்டுத் தொகை ரூ.5,00,000/– கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:27:24 +0530

**2. வாதியின் வழக்குரைச் சுருக்கம்:**

தாவா சொத்தானது மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி, காழியப்பநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள புஞ்சை சர்வே எண்372/14–ல் 0.13.50 (33 1/3 செண்ட்) பூரா சொத்து 15.07.1958–ல் பிரதிவாதியின் தந்தை அமர்தலிங்கம் செட்டியார் மாரிமுத்து வாரிசுகளிடமிருந்து கிரயம் வாங்கி உரிமையுடன் அனுபவித்து வந்துள்ளார். அதன் பிறகு அமிர்தலிங்கம் செட்டியார் இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகள் அனுபவித்து வசத்தில் இருந்து வந்துள்ளது. தாவா சொத்து அமிர்தலிங்கம் செட்டியார் வாரிசுகள் மற்றும் பிரதிவாதி ஆகியோர்கள் 30.07.2020ம் தேதியில் பிரதி பிரயோஜனத்தின் பேரில் வாதிக்கு கிரய ஆவணம் எழுதி ஆவண எண்.520 ஆக தரங்கம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி உட்பட கிரய நபர்கள் அனைவருக்கும் கிரயத் தொகை முழுவதையும் வாதி கொடுத்துவிட்டார். கிரயம் கொடுத்துவிட்ட பிறகு தாவா சொத்தில் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. தாவா சர்வே எண்.372/14–ல் 0.13.5 ஏர்ஸ் இடத்திற்கு அமிர்தலிங்கம் செட்டியார் பெயரில் பட்டா இருந்தது. தாவா சர்வே எண் விஸ்தீரணம் பூஸ்துதியில் தாவா சொத்தில் தான் உள்ளது. தாவா சர்வே எண் பூரா விஸ்தீரணம் வாதி வசம் இருந்து வருகிறது. பிரதிவாதி வாதிக்கு கிரய பதிவு செய்து கொடுத்தப் பிறகு தாவா சர்வே எண்ணில் 7 1/2 செண்ட் இடம் உள்ளதை பிரதிவாதியிடம் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று 16.02.2021ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதற்கு வாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். பிரதிவாதி பூஸ்துதியில் இல்லாத சொத்தை வசம் இருப்பதாக அறிவிப்பு கொடுத்ததால் வாதிக்கு மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார். இதனால் ரூ.1,00,000/– இழப்பீடு கொடுக்க வேண்டுமென்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். அதன் பிறகு தாவா சர்வே எண்ணில் 20 குழக்கான தொகையை மட்டும் சரோஜினி என்பவருக்கு பாக தொகையாக கொடுக்கவில்லை. அரசு புறம்போக்கு சொத்தை வசம் கொடுக்க வேண்டுமென்று 19.03.2022ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதி கொடுத்துள்ளார். அதற்கு பிறகு 28.03.2022ம் தேதியில் பதில் அறிவிப்பு வாதி கொடுத்துள்ளார். சரோஜினி என்பவர் அவருக்கு சேர வேண்டிய கிரயத் தொகையை பெற்றுக்கொண்டதால் ஆவணத்தை எழுதிக் கொடுத்தார். அதன் பிறகு தாவா சொத்திற்கான கிரய தொகையை

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:27:30 +0530

ரூ.8,40,000/− என நிர்ணயித்து வாதி ரூ.3,40,000/− செலுத்தியதாகவும், மீதி ரூ.5,00,000/− கிரய தொகையை கிரயம் எழுதும் சமயத்தில் தருவதாக வாதி கூறியுள்ளார். மீண்டும் 02.05.2022 ம் தேதியன்று பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு, 17.06.2022 ம் தேதியில் வாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். தாவா சொத்திற்கான கிரய தொகை ரூ.28,000/− முழுவதையும் வாதி செலுத்திவிட்டார். 30.07.2020 ம் தேதியில் புல எண் பொறுத்து அமிர்தலிங்கம் வாரிசுகள் எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் செல்லக்கூடியது. பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புகள் ஒன்றுக்கொன்று முரணாக கொடுத்துள்ளதால் அறிவிப்புகள் பொய்யானவை. வாதி சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ள நபர். வாதிக்கு பிரதிவாதி அறிவிப்பு அனுப்பியுள்ளதால் வாதிக்கு நஷ்ட ஈடாக ரூ.5,00,000/− கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார். எனவே 16.02.2021, 19.03.2022 மற்றும் 02.05.2022 ஆகிய தேதிகளில் வாதிக்கு பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளதால் ஏற்பட்ட மனஉளைச்சலுக்கும், மனவேதனைக்கும் ரூ.5,00,000/− நஷ்ட ஈடு கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கதக்கதல்ல. பிரதிவாதி நேரடியாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் தவறானதும், உண்மைக்கு புறம்பானது. இதனை வாதி நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார். வாதி பிரதிவாதியின் தந்தை அமிர்தலிங்கம் செட்டியாருக்கு சொந்தமான தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளார். அமிர்தலிங்கம் செட்டியார் இறந்துவிட்டதால் அவர் வாரிசுகளிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார். கிரயத்திற்கு முன்பு ஒரு குழி ரூ.7,000/− என விலை பேசி 120 குழிக்கு கூடுதல் ரூ.8,40,000/− கொடுப்பதாக வாதி ஒப்புக் கொண்டு கிரயத் தொகையை பல தவணைகளில் ரூ.3,40,000/− கொடுத்துள்ளார். பாக்கி தொகை ரூ.5,00,000/− த்தை கிரயம் செய்யும் போது கொடுப்பதாக உறுதிக் கூறினார். அரசு வழி காட்டி மதிப்பின்படி வாதி தாவா சொத்தினை கிரயம் பெற்றுள்ளார். அமர்தலிங்கம் செட்டியார் வாரிசுகளுக்கும், வாதிக்கும் இடையே எழுத்து மூலமாக உடன்படிக்கை ஏதுமில்லை. பிரதிவாதிக்கு 73 வயது ஆனதால் ஒப்புக்கொண்டபடி வாதி பாக்கி தொகையை கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார். இதனால் வாதி அறிவிப்புகளை பெற்று

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:27:36 +0530

பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.No.28860/2022 என்ற ரிட் மனு தாக்கல் செய்து பொறையார் காவல் துறை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி 01.11.2022 ல் உத்திரவாதியுள்ளது. வாதி, பிரதிவாதி மற்றும் அவரது சகோதர சகோதரிகளுக்கு கொடுக்கவேண்டிய கிரயப் பாக்கித் தொகையை கொடுக்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். உரிய நபர்களை சேர்க்காமல் பிரதிவாதியை கஷ்ட நஷ்டம் ஏற்படுத்த வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

<u>4. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.</u>

1. 06.02.2021, 19.03.2022, 02.05.2022 தேதியிட்டு பிரதிவாதி, வாதிக்கு அறிவிப்பு அனுப்பியதால் வாதிக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் மன வேதனைக்கு பிரதிவாதி இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளாரா?

2. வழக்கில் கோரியபடி வாதிக்கு ரூ.5,00,000/- இழப்பீடு கிடைக்கக்கூடியதா?

3. வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

**5.** இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆகவும், தொல்காப்பியன் என்பவர் பி.வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதி தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. எழுவினா 1 மற்றும் 2-க்கான தீர்வு:</u>

வாதி தரப்பு வழக்கானது தாவா சொத்து மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி, காழியப்பநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள புஞ்சை சர்வே எண்.372/14-ல் பூரா 0.13.5 (33. 1/3 செண்ட்) சொத்து 15.07.1958-ல் பிரதிவாதியின் தந்தை அமர்தலிங்கம் செட்டியார், மாரிமுத்து வாரிசுகளிடமிருந்து கிரயம் வாங்கி உரிமையுடன் அனுபவித்து வந்து, அமிர்தலிங்கம் செட்டியார் இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகள் வசத்தில்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:27:42 +0530

இருந்து வந்தது என்றும், பிரதிவாதி மற்றும் அமிர்தலிங்கம் செட்டியாரின் மற்ற வாரிசுகள் 30.07.2020ம் தேதியில் சரியான பிரதி பிரயோஜனத்தின் பேரில் வாதிக்கு கிரய ஆவணம் எழுதி ஆவண எண்.520 ஆக தரங்கம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதி உட்பட கிரய நபர்கள் அனைவருக்கும் கிரயத் தொகை முழுவதையும் வாதி கொடுத்துவிட்டதாகவும், கிரயம் கொடுத்துவிட்ட பிறகு தாவா சொத்தில் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சர்வே எண்.372/14–ல் 0.13.50 ஏர்ஸ் இடத்திற்கு அமிர்தலிங்கம் செட்டியார் பெயரில் பட்டா இருந்தது என்றும், தாவா சர்வே எண் பூஸ்துதியில் அதே விஸ்தீரணம் உள்ளது என்றும், தாவா சொத்து வாதி வசம் இருந்து வருகிறது என்றும், வாதிக்கு கிரய பதிவு செய்து கொடுத்த பிறகு தாவா சர்வே எண்ணில் 7 1/2 செண்ட் இடம் உள்ளதை பிரதிவாதியிடம் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று 16.02.2021ம் தேதியில் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதற்கு வாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளதாகவும், பிரதிவாதி பூஸ்துதியில் இல்லாத சொத்தை வசம் இருப்பதாக அறிவிப்பு கொடுத்ததால் வாதி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும், இதனால் ரூ.1,00,000/– இழப்பீடு கொடுக்க வேண்டுமென்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளதாகவும், அதன் பிறகு தாவா சர்வே எண்ணில் 20 குழக்கான தொகை மற்றும் சரோஜினி என்பவருக்கான பாக தொகை கொடுக்கவில்லை என்றும், அரசு புறம்போக்கு சொத்தை வசம் கொடுக்க வேண்டுமென்றும் 19.03.2022ம் தேதியன்று பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து, அதற்கு 28.03.2022ம் தேதியில் பதில் அறிவிப்பு வாதி கொடுத்துள்ளதாகவும், சரோஜினி என்பவர் அவருக்கு சேர வேண்டிய கிரயத் தொகையை பெற்றுக்கொண்டு தான் ஆவணத்தை எழுதிக் கொடுத்தார் என்றும், அதன் பிறகு தாவா சொத்திற்கான கிரய தொகையை ரூ.8,40,000/– என நிர்ணயித்து வாதி ரூ.3,40,000/– செலுத்தியதாகவும், மீதி ரூ.5,00,000/– கிரய தொகையை கிரய சமயத்தில் தருவதாக வாதி கூறியதாகவும், அவ்வாறு தரவில்லை என்று மேற்படி தொகையை கேட்டு மீண்டும் 02.05.2022ம் தேதியன்று பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு, 17.06.2022ம் தேதியில் வாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளதாகவும், தாவா சொத்திற்கான கிரய தொகை ரூ.28,000/– முழுவதையும் வாதி செலுத்திவிட்டார் என்றும், 30.07.2020ம் தேதியில் தாவா புல எண் பொறுத்து

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:27:48 +0530

அமிர்தலிங்கம் வாரிசுகள் எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் செல்லக்கூடியது என்றும், பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளதென்றும், அவை பொய்யானவை என்றும், வாதி சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ள நபர் என்றும், வாதிக்கு பிரதிவாதி அறிவிப்பு அனுப்பியுள்ளதால் வாதிக்கு நஷ்ட ஈடாக ரூ.5,00,000/- கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார் என்றும், எனவே 16.02.2021, 19.03.2022 மற்றும் 02.05.2022 ஆகிய தேதிகளில் வாதிக்கு பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியாதால் வாதிக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கும், மனவேதனைக்கும் ரூ.5,00,000/- பிரதிவாதி நஷ்ட ஈடு வழங்கக் கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. வாதியின் வழக்கிற்கு பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பிரதிவாதியின் தந்தை அமிர்தலிங்கம் செட்டியாருக்கு சொந்தமான தாவா சொத்தை வாதி கிரயம் பெற்றுள்ளதாகவும், அமிர்தலிங்கம் செட்டியார் இறந்துவிட்டதால் அவர் வாரிசுகளிடமிருந்து கிரயம் பெற்றுள்ளதாகவும், கிரயத்திற்கு முன்பு ஒரு குழி ரூ.7,000/- விலை பேசி 120 குழிக்கு கூடுதல் ரூ.8,40,000/- கொடுப்பதாக வாதி ஒப்புக் கொண்டு கிரயத் தொகையை பல தவணைகளில் ரூ.3,40,000/- கொடுத்துள்ளார் என்றும், பாக்கி தொகை ரூ.5,00,000/- கிரயம் செய்யும் போது கொடுப்பதாக உறுதிக் கூறினார் என்றும், அரசு வழி காட்டி மதிப்பின்படி வாதி தாவா சொத்தினை கிரயம் பெற்றுள்ளார் என்றும், அமிர்தலிங்கம் செட்டியார் வாரிசுகளுக்கும், வாதிக்கும் இடையே எழுத்து மூலமாக உடன்படிக்கை ஏதுமில்லை என்பதால் ஒப்புக்கொண்டபடி வாதி பாக்கி தொகையை கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார் என்றும், இதனால் வாதி அறிவிப்புகளை பெற்று பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளதாகவும், பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.No.28860/2022 என்ற ரிட் மனு தாக்கல் செய்து பொறையார் காவல் துறை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி 01.11.2022 ல் உத்திரவாதியுள்ளது என்றும், பிரதிவாதி மற்றும் அவரது சகோதர சகோதரிகளுக்கு கொடுக்கவேண்டிய கிரயப் பாக்கித் தொகையை வாதி கொடுக்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், உரிய நபர்களை சேர்க்காமல் பிரதிவாதிக்கு கஷ்ட நஷ்டம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:27:53 +0530

ஏற்படுத்த வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதால், இவ்வழக்கை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

8. இவ்வழக்கில் வாதி தரப்பு சான்றவணங்களை பரிசீலனை செய்கையில் தாவா புல எண் 372/14–ல் பூரா 0.13.50 ஏர்ஸ்க்கு 0 ஏக்கர் 33.1/3 செண்ட் நிலத்தில் 20–ல் 19 பிரியாத பாக வீதம் வாதிக்கு அமிர்தலிங்கம் செட்டியார் வாரிசுகள் எழுதிக் கொடுத்த கிரய ஆவண சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகவும், தாவா சர்வே எண்ணில் கூடுதல் 7 1/2 செண்ட் ஒப்படைக்கக் கோரி வாதிக்கு பிரதிவாதி மற்றும் அமிர்தலிங்கம் செட்டியார் வாரிசுகள் 16.02.2021 தேயில் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், 25.02.2021 தேதியில் வாதி கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும், 19.02.2023 தேதியில் தாவா புல எண்ணில் 120 குழியில் 100 குழிக்கான தொகையை செலுத்தியுள்ளதாகவும், பாக்கி 20 குழி, சரோஜினி என்பவருக்கு சேர வேண்டிய பாக தொகை மற்றும் அரசு புறம்போக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக அதனை வசம் ஒப்படைக்க கோரியும் பிரதிவாதி, வாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆகவும், 28.03.2022 தேதியில் வாதி கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.5 ஆகவும், 02.05.2022 தேதியில் தாவா சொத்தை ரூ.8,40,000/– க்கு கிரயம் பேசி கிரய தொகையில் ரூ.3,40,000/– பல தவணைகளில் செலுத்தியுள்ளதாகவும், மீதியுள்ள ரூ.5,00,000/– தொகையை கிரய தெகையை வங்க கோரியும், இது தொடர்பாக 11.04.2022 தேதியில் மயிலாடுதுறை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் மனு வழங்கியுள்ளதாகவும், மயிலாடுதுறை மாவட்ட பதிவாளர் கிரய ஆவணத்தை ரத்து செய்ய அனுப்பியுள்ளதாகவும் குறிப்பிட்டு பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ. 6 ஆகவும், அதற்கு வாதி கொடுத்த 07.06.2022 தேதிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகவும், தாவா புல எண்.372/2014–ல் 0.13.50 ஏர்ஸ் பிரதிவாதியின் தந்தை அமிர்தலிங்கம் செட்டியார் பெயரில் வழங்கப்பட்ட கணிணி பட்டா வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

9. இவ்ழக்கில் வழக்குரை சங்கதிகளை நிரூபிக்க வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய சாட்சியத்தில் தான் காழியப்பநல்லூர் கிராமத்தில் பிரிக்ஸ் தொழில் செய்து வருவதாகவும், மேற்படி தொழில் நிறுவனம் 15

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:27:59 +0530

ஏக்கரில் செய்து வருவதாகவும், பிரதிவாதியிடமிருந்து தான் கிரயம் பெற்ற தாவா இடம் 15 ஏக்கருக்கு பக்கத்தில் தான் உள்ளது என்றும், இரண்டு இடத்திற்கும் சேர்த்து சுற்று சுவர் வேலி அமைத்துள்ளதாகவும், தாவா சொத்தை ரூ.28,000/– த்திற்கு கிரயம் பெற்றுள்ளதாகவும், 20 பேரில் 19 நபர் கிரய ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளதாகவும், ஒரு பாகத்தை விட்டு மீதி இடத்தை கிரயம் வாங்கியுள்ளதாகவும், 22 ஆண்டுகளாக தாவா சொத்தை அனுபவத்தில் வைத்துள்ளதாகவும், 2020–ல் கிரயம் ஏற்பட்டது என்றும், கிரயம் பெறாத ஒரு பாகத்தின் தொகையை உரியவரிடம் கொடுக்காமல் அந்த பாகத்தையும் வசத்தில் வைத்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், அதன் உரிமையாளரை பிரதிவாதி அழைத்து வந்து கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றும், 100 குழிக்கு தான் பட்டா உள்ளது என்றும், அதனை தான் கிரயம் வாங்கியதாகவும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10. இவ்வழக்கின் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய சாட்சியத்தில் தாவா சொத்து காழியப்பநல்லூரில் உள்ளது என்றும், சர்வே எண்.372/14, விஸ்தீரணம் 120 குழி, 33.1/3 செண்ட் என்றால் சரிதான் என்றும், கணக்கு படி 33.1/3 செண்ட் என்பது 100 குழி வரும் என்றால் சரிதான் என்றும், தாவா சொத்து அமிர்தலிங்கம் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான் என்றும், 30.07.2020–ல் தானும், தன் தந்தையின் மற்ற வாரிசுகளும் சேர்ந்து தாவா சொத்தை வாதிக்கு கிரயம் கொடுத்தோம் என்றால் சரிதான் என்றும், கிரய ஆவணத்துடன் தன் தந்தை பெயரில் உள்ள பட்டாவும் சேர்ந்து உள்ளது என்றால் சரிதான் என்றும், அதில் புல எண். 372/14–ல் 0.13.5 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், தன் தந்தைக்கு 372/14–ல் 0.13 1/2 ஏர்ஸ் தான் சொந்தம் என்றால் சரிதான் என்றும், தாவா கிரய தொகை ரூ.28,000/– பெற்று கொண்டதாக கிரய ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான் என்றும், தாவா சர்வே எண்.372/14–ல் பூமியில் 0.13.50 ஏர்ஸ் நிலம் உள்ளது என்றால் சரிதான் என்றும், தான் கொடுத்த வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பில் கூடுதலாக 71/2 செண்ட உள்ளது என்றும், அதனை வசம் ஒப்படைக்குமாறு கோரியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு மீண்டும் தான் வாதிக்கு கொடுத்தது என்றால் சரிதான் என்றும், அதில் 20 குழிக்கான தொகையை கொடுக்கும் படியும், புறம்போக்கு நிலத்தை ஒப்படைக்கும்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:28:04 +0530

படியும் சொல்லியுள்ளேன் என்றால், தங்கள் சொத்து 120 குழி அதில் கிரயம் கொடுத்தது 100 குழி என்றும், அதில் மீதி 20 குழிக்கு தொகை கேட்டுள்ளதாகவும், அரசு புறம்போக்கு நிலத்தை ஒப்படைக்கவும், சரோஜினிக்கான கிரய பாக்கித்தொகையும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் சரோஜினி என்பவர் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான் என்றும், தனக்கு சேர வேண்டிய கிரய தொகையை கொடுக்காததால் அறிவிப்பு கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

11. பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.வா.சா.2 தம்முடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்து 120 குழிக்கு மொத்தம் ரூ.8,40,000/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, பல தவணைகளில் ரூ.3,40,000/- கொடுத்துள்ளதாகவும், மீதி கிரய தொகை ரூ.5,00,000/-த்தை வாதி கொடுக்காமல் ஆட்களை வைத்து வெளியே அனுப்பிவிட்டதாகவும், காவல் துறையில் புகார் கொடுத்தும் வாதி தனது செல்வாக்கு மூலம் விசாரணை செய்யவிடாமல் தடுத்து விட்டதாகவும், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து காவல் துறையில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவாகி உள்ளது என்றும், இதனை மறைத்து வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும் பி.வா.சா.2 தம்முடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்து ஆதியில் அமிர்தலிங்கம் செட்டியாருக்கு சொந்தமானதாக இருந்ததா என்றால் அது குறித்து தெரியாது என்றும், பிரதிவாதி 20 ஆண்டுகளாக பழக்கம், குடும்ப நண்பர் என்றும், எந்த தேதியில் தானும், பிரதிவாதியும் எம்.கே.பி. பிரிக்ஸ் அலுவலகத்திற்கு சென்றது எப்போது, எந்த தேதியில் பேசினோம் என்றால் நாங்கள் செல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் தன்னை வாதி அடிக்க வந்ததாகவும், அது தொடர்பாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய வாதுரையில் தாவா சொத்து புல எண்.372/14 பிரதிவாதி தந்தை அமிர்தலிங்கம் செட்டியாருக்கு சொந்தமானதாக இருந்தது என்றும், அமிர்தலிங்கம் இறந்தபிறகு பிரதிவாதி உட்பட அமிர்தலிங்கம் செட்டியாரின் வாரிசுகள் அனைவரும் அனுபவித்து வந்த சொத்து என்றும், மேற்படி

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:28:09 +0530

சொத்தில் சர்வே எண்.372/14–ல் 19/20 பாகவீதம் 30.07.2020 தேதியில் வாதி கிரயம் பெற்று கிரயத் தொகை முழுவதையும் அமிர்தலிங்கம் செட்டியார் வாரிசுகளுக்கு கொடுத்து முடித்துவிட்டார் என்றும், இந்நிலையில் பிரதிவாதி தாவா புல எண்ணில் கூடுதலாக உள்ள 7 1/2 செண்ட் நிலத்தை ஒப்படைக்க கோரியும், தாவா சொத்து புல எண்ணில் 20 குழிக்கான தொகை சரோஜினி பாகத்திற்குரிய கிரய தொகை கேட்டும், புறம்போக்கு சொத்தை திரும்ப ஒப்படைக்க கேட்டும், வழக்கறிஞர் அறிவிப்புகள் கொடுத்துள்ளதால் வாதி மிகுந்த மன உளைக்கும், மன வேதனைக்கும் ஆளாகி இருப்பதாகவும், பிரதிவாதி அனுப்பிய அறிவிப்புகளுக்கு உண்மை சங்கதிகளை குறிப்பிட்டு வாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும், தாவா சொத்து தொடர்பாக சேர வேண்டிய கிரய தொகையை பெற்றுக் கொண்டு கிரயம் கொடுத்துவிட்டு ஒன்றுக்கொன்று முரண்பட்ட விவரங்களை குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பி வாதிக்கு பிரதிவாதி மன உளைச்சல் மற்றும் மன வேதனையை ஏறப்படுத்தியுள்ளதால் வாதிக்கு, பிரதிவாதி ரூ.5,00,000/– இழப்பீடு வழங்கும்படி வழக்கில் கோரியப்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரி வாதுரைத்துள்ளார்.

13. பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய எழுத்து மூலமான வாதுரையில் பிரதிவாதியின் தந்தை அமிர்தலிங்கம் செட்டியாருக்கு சொந்தமான சொத்தை அவருடைய வாரிசுகளிடமிருந்து வாதி கிரயம் பெற்றுள்ளதாகவும், கிரய தொகை ரூ.8,40,000/– கொடுப்பதாக ஒப்புக்கொண்டு பல தவணைகளில் ரூ.3,40,000/– கொடுத்துள்ளதாகவும், அரசு வழி காட்டி மதிப்பின்படி ரூ.28,000/–க்கு வழக்கு சொத்தை கிரயம் பெற்றுள்ளதாகவும், வாதிக்கும், அமிர்தலிங்கம் செட்டியார் வாரிசுகளுக்கும் இடையே எழுத்து மூலமாக உடன்படிக்கை எதுவுமில்லை என்பதால், பாக்கி கிரயத்தொகையை கொடுக்காமல் வாதி ஏமாற்றி விட்டதாகவும், இது குறித்து வழக்கறிஞர் அறிவிப்புகள் கொடுத்தும் தவறான சங்கதிகளை கொண்டு பதில் அறிவிப்புகள் கொடுத்துள்ளதாகவும், பாக்கி கிரய தொகை ரூ.5,00,000/– வாதி கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார் என்றும், தாவா சொத்து 22 வருடங்களாக வாதி வசத்தில் இருந்து வருகிறது என்பதும், 2020–ல் கிரயம் பெறாத ஒரு பாக சொத்திற்குண்டான தொகையை உரியவரிடம் கொடுக்காமல் அந்த பாகத்தையும் சேர்த்து வசத்தில் வைத்துள்ளதாகவும் வாதி தன் சாட்சித்திலேயே

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:28:16 +0530

ஒப்புக்கொண்டுள்ளதாகவும், எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியுள்ளார்.

14. இவ்வழக்கில் இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் பரிசீலனையில் பிரதிவாதியின் தந்தை அமிர்தலிங்கம் செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து பிரதிவாதி உட்பட அமிர்தலிங்கம் செட்டியார் மற்ற வாரிசுகள் தங்களின் 19/20 பாக வீதத்தை வா.சா.ஆ.1ன் மூலம் வாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஆவணத்தில் கிரய தொகை ரூ.28,000/– பல தவணைகளில் சிறுக சிறுக பெற்றுக்கொண்டு பூரா கிரயத் தொகையயும் பற்றாகி விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஆவணத்தில் சொத்து விவரமாக தாவா புல எண்.372/14–ல் பூரா 0.13.50 ஏர்ஸ் 0 ஏக்கர் 33.1/3 செண்ட் நிலத்தில் 19/20 பாகம் பிரியாத வீத சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டா எண். 1091 தாவா சர்வே எண்.372/14–ல் 0.13.50 ஏர்ஸ்க்கு பிரதிவாதி தந்தை அமிர்தலிங்கம் செட்டியார் பெயரில் உள்ளது. மேற்படி கிரய ஆவணம் ஏற்பட்ட பிறகு 16.02.2021, 19.03.2022 மற்றும் 02.05.2022 ஆகிய தேதிகளில் முறையே வா.சா.ஆ.2, 4, 6 சட்ட அறிவிப்புகள் பிரதிவாதியால் வாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்புகளின் பரிசீலனையில் 7 1/2 செண்ட் தாவா புல எண்ணில் கூடுதலாக வாதி சுவாதீனத்தில் இருப்பதாகவும், அதை ஒப்படைக்குமாறும் வா.சா.ஆ.2 அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 அறிவிப்பில் பிரதிவாதி தாவா புல எண்ணில் கூடுதலாக உள்ள 20 குழிக்கான தொகை, சரோஜினியின் பாகத்திற்கான கிரய தொகை மற்றும் அரசு புறம்போக்கு சொத்தை ஒப்படைக்கக் கோரியுள்ளார். வா.சா.ஆ.6 அறிவிப்பில் ரூ.8,40,000/– தாவா சொத்திற்கு கிரயம் பேசப்பட்டு ரூ.3,40,000/– பல தவணைகளில் பெற்றுக் கொண்டது போக மீதி ரூ.5,00,000/– கிரய தொகையை கொடுக்கக்கோரியும், இது தொடர்பாக கிரய ஆவணத்தை ரத்து செய்ய மாவட்ட பதிவாளருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளதாகவும், மயிலாடுதுறை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சட்ட அறிவிப்புகளுக்கு வாதியால் வா.சா.ஆ.3, 5, 7 பதில் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:28:21 +0530

15. வாதி தம்முடைய சாட்சியத்தில் தாவா புல எண்ணில் 20–ல் 19 பிரிக்கப்படாத பாக வீதம் பிரதிவாதி மற்றும் அமிர்தலிங்கம் செட்டியார் வாரிசுகளிடமிருந்து கிரயம் பெற்றுள்ளதாகவும், கிரயம் பெறாத மற்றொரு பாகத்திற்கான கிரய தொகையை கொடுக்காமல் வசத்தில் வைத்துள்ளதாகவும், கிரயத் தொகை ரூ.28,000/– பேசப்பட்டு கிரயம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தாவா புல எண் 33. 1/3 செண்ட் என்றும், மேற்படி விஸ்தீரணத்திற்கு தான் வா.சா.ஆ.7 பட்டா பிரதிவாதியின் தந்தை பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் கிரய தொகை ரூ.28,000/– குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தன் தந்தைக்கு தாவா புல எண் 372/14–ல் பூரா 0.13.50 ஏர்ஸ் தான் சொந்தம் என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். மேலும் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6 அறிவிப்புகள் கொடுத்துள்ளதையும் பிரதிவாதி தம்முடைய சாட்சியத்தில் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் கிரய தொகை ரூ.8,40,000/– என தாவா சொத்திற்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.3,40,000/– சிறுக சிறுக பெற்றுக்கொண்டு, மீதி ரூ.5,00,000/– கிரய தேதியில் கொடுப்பதாக வாதி கூறியதாகவும், அவ்வாறு கொடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட மீதி கிரய தொகையை வாதி கிரய தேதியில் கொடுக்காதது குறித்து மயிலாடுதுறை மாவட்ட பதிவாளரிடம் புகார் மனு கொடுத்ததாக வா.சா.ஆ.6 அறிவிப்பில் பிரதிவாதியால் தெரிவிக்கப்பட்டுள்ள போதும், அது தொடர்பான ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் கிரய தொகை முழுவதையும் பெற்றுக் கொண்டுவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வாதிக்கு 16.02.2021–ல் பிரதிவாதி கொடுத்த வா.சா.ஆ.2 அறிவிப்பில் இந்த விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும் சரோஜினிக்கான கிரய தொகையை கொடுக்கவில்லை என்று வா.சா.ஆ.4 அறிவிப்பில் பிரதிவாதியால் குறிப்பிடப்பட்டுள்ள போதும், வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் சரோஜினியும் ஒரு தரப்பினர் என்பதும், கிரய ஆவணத்தில் தரப்பினர்கள் பூரா கிரய தொகையும் பெற்று கொண்டு பற்றாகிவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வாதிக்கு வா.சா.ஆ.2 அறிவிப்பு பிரதிவாதி மற்றும் அமிர்தலிங்கம் செட்டியார் மற்ற வாரிசுகளால் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6 அறிவிப்புகள் பாக்கி கிரய தொகை ரூ.5,00,000/– கேட்டு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:28:27 +0530

பிரதிவாதியால் இந்த அறிவிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 20–ல் 19 பிரிபடாத பாக வீத தாவா சொத்து குறித்து பிரதிவாதி உட்பட அமிர்தலிங்கத்தின் வாரிசுகளால் வாதிக்கு கிரய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு பாக வீதத்திற்குரிய பாக தாரருக்கு சேர வேண்டிய தொகையை கொடுக்கக் கோரி மேற்படி அறிவிப்புகளில் எவ்வித விவரமும் இல்லை. இது தொடர்பாக வா.சா.1 தம்முடைய சாட்சியத்தில் ஒரு பாகத்திற்குண்டான தொகையை உரியவரிடம் கொடுக்கவில்லை என்றும், அந்த உரிமையாளரை பிரதிவாதி அழைத்து வந்து கிரய ஆவணம் செய்து கொடுக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

16. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து தாவா புல எண் மொத்த விஸ்தீரணம் 0.13.50 ஏர்ஸ்க்கு சமமான 33.1/3 செண்ட் என்பது வா.சா.ஆ.1 கிரய ஆவணம் மற்றும் வா.சா.ஆ.7 பட்டா மூலம் தெரியவருகிறது. வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் பூரா விஸ்தீரணம் 0.13.50 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ளபடி கூடுதல் விஸ்தீரணம் உள்ளது என்று காட்டக்கூடிய எவ்வித சான்றாவணமும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் வா.சா.ஆ.1 கிரய ஆவணத்திலும் அதனுடன் இணைக்கப்பட்ட பட்டாவிலும் சொத்து விஸ்தீரணம் 0.13.50 ஏர்ஸ் என்பது தம்முடைய சாட்சியத்திலேயே பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6 முன்னுக்கு பின் முரணான விவரங்களை கொண்டு வாதிக்கு கொடுக்கப்பட்ட சட்ட அறிவிப்புகள் ஆகும். வா.சா.ஆ.2 சட்ட அறிவிப்பு பிரதிவாதி மற்றும் அமிர்தலிங்கம் செட்டியாரின் இதர வாரிசுகளால் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6 அறிவிப்புகள் பிரதிவாதியால் வாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்புகளில் கண்டுள்ள சங்கதிகளை குறித்து பிரதிவாதி தரப்பில் போதுமான சாட்சி, சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை. தாவா சொத்து சரியான மறுபயனுக்கு 20–ல் 19 பிரிபடாத பாக வீதம் வாதியால் கிரயம் பெறப்பட்டுள்ளது என்பது வாதி தரப்பில் வா.சா.ஆ.1ன் மூலம் நிரூப்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1க்கு முரணாக பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட அறிவிப்புகளால் வாதிக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கும், மன வேதனைக்கும் ரூ.5,00,000/– நஷ்ட ஈடு கோரி வாதி இவ்வழக்கை தாக்கல்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:28:40 +0530

செய்துள்ளார். வாதி தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் இவ்வழக்கை நிரூப்பித்துள்ளதால் இவ்வழக்கை பகுதியாக அனுமதித்து, வாதிக்கு பிரதிவாதி ரூ.50,000/– இழப்பீடு வழங்க உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று தீர்மானித்து எழுவினா 1 மற்றும் 2–க்கு தீர்வு காணப்படுகிறது.

<u>17. எழுவினா 3 –க்கான தீர்வு :</u>

வாதியின் வழக்கு பகுதியாக அனுமதிக்கக்கூடியது என்று எழுவினா 1 மற்றும் 2–க்கு தீர்வு காணப்பட்டுள்ளதால், வழக்கில் வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் எதுவுமில்லை என்று எழுவினா 3–க்கு தீர்வு காணப்படுகிறது.

**18. முடிவாக,** இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, வழக்கு சொத்து தொடர்பாக வாதிக்கு பிரதிவாதி கொடுத்த சட்ட அறிவிப்புகளால் வாதிக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கும், மன வேதனைக்கும் வாதிக்கு நஷ்ட ஈடாக ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) இன்றைய தேதியிலிருந்து 2 மாதக் காலத்திற்குள் பிரதிவாதி வழங்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:28:56 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>
<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>

வா.சா.1 திரு. கலியமூர்த்தி ( வாதி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

வா.சா.ஆ.1 30.07.2020 வாதிக்கு அமிர்தலிங்கம் செட்டியார் வாரிசுகள் எழுதிக் கொடுத்த கிரய ஆவண சான்று நகல்

வா.சா.ஆ.2 16.02.2021 வாதிக்கு பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு

வா.சா.ஆ.3 25.02.2021 வாதி பிரதிவாதிக்கு கொடுத்த பதில் அறிவிப்பு

வா.சா.ஆ.4 19.03.2022 வாதிக்கு பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு

வா.சா.ஆ.5 28.03.2022 வாதி பிரதிவாதிக்கு கொடுத்த பதில் அறிவிப்பு

வா.சா.ஆ.6 02.05.2022 வாதிக்கு பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு

வா.சா.ஆ.7 17.06.2022 வாதி பிரதிவாதிக்கு கொடுத்த பதில் அறிவிப்பு

வா.சா.ஆ.8 06.08.2022 தாவா சொத்திற்கான கணிணி பட்டா

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>**

பி.வா.சா.1 திரு. பொன்னுசாமி (பிரதிவாதி)
பி.வா.சா.2 திரு. தொல்காப்பியன்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** **<u>–இல்லை.</u>**

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.30 18:29:02 +0530

சார்பு நீதிபதி, சீர்காழி.

நேரிய/ வரைவு தீர்ப்புரை
அசல் வழக்கு எண். 292/202
நாள் – 30.03.2026